பக்கங்கள் - 23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 19 வியாழக்கிழமை 04.12.2025 | அதிர்வு 126

**பகிடிவதை குற்றச்சாட்டு:**

## யாழ். பல்கலை மாணவர் 19 பேருக்கு மறியல் நீடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பகிடிவதை புரிந்த குற்றச்சாட்டில் கைதான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்கள் 19 பேரின் 05

## டிசம்பர் 6 முதல் 9 வரை கனமழைக்கு வாய்ப்பு! மலையகத்தில் மீண்டும் மண்சரிவு ஏற்படலாம்!!

**பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை**



"வரும் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நாடு முழுவதும் மிதமானது முதல் கனமழையும் கிடைக்க வாய்ப்புள் ளது. மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகா ணங்களில் சிறிய கனமழை பெய்தாலும் (30- 40 மி. மீ. என்றா லும்) நிலச்சரிவு ஏற்படும். எனவே, 06

**பேரிடரால் பாதிக்கப்பட்ட**

# இலங்கைக்கு இந்தியா 3 கட்டங்களில் உதவிகள்

**வடக்கு ஆளுநரிடம் துணைத் தூதுவர் தெரிவிப்பு**



யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத் தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி, வடக்கு மாகா ணத்தின் ஆளுநர் நா.வேத நாயகனை ஆளுநர் செய லகத்தில் நேற்று புதன் கிழமை காலை சந்தித்துப் பேச்சு நடத்தினார். பேரிட ரால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான உதவிகளை மூன்று கட்டங்களில் வழங்க இந் திய அரசாங்கம் தயா 07

## பேரிடரில் உயிரிழந்தோருக்கு நாடாளுமன்றத்தில் அஞ்சலி!

இலங்கையில் ஏற்பட்ட பேரிடரில் உயிரிழந்தோருக்கு நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை அஞ்சலி செலுத் தப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா கயந்த கருணாதிலகவின் கோரிக்கைக்கு அமைவாக சகல நாடாளுமன்ற உறுப்பி னர்களும் பேரிடரில் உயிரிழந்த மக்க



ளுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.



## சாவு எண்ணிக்கை 479 ஆக அதிகரிப்பு

இலங்கையில் சீரற்ற கால நிலையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 479 ஆக உயர்ந்துள் ளது. 05




எந்தப் பெரிய விக்கினமும் இடைஞ்சலும் இல்லாமல் மாவீரர் தினம் இம்முறை தமிழர் தாயகம் எங்கும் எழுச்சியோடு அனுஷ்டிக்கப் பட்டு முடிந்து விட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசு இறந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வுகளுக்குத் தடை விதிப்பதில்லை என்ற என்ற அரசியல் முடிவை எடுத்து, நடைமுறைப்படுத்தியமை யால், ஆங்காங்கே பொலிஸார் தத்தமது மட்டத்தில் மேற்கொண்ட கெடுபிடிகளைத் தவிர, வேறு இடைஞ்சல்களின்றி மாவீரர் தின நிகழ்வுகள் ஒப்பேறி விட்டன.

அதற்கு அடுத்த நாள் தொடக்கம் கடும் மழை, பெரு வெள்ளம், புயல், மண்சரிவுகள் போன்ற அனைத்துப் பேரிடர்களும் தொடர்ந் தமையால் அதற்கு முன்னர் எழுச்சியோடு அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினம் பற்றிய செய்திகளும் அடங்கி போயின.

புலிகளின் சீருடைகள், சின்னங்கள் இன்றி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படு 05





# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்களுக்கு சாணக்கியன் தலைமையில் உலர் உணவு வழங்கல்!

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் வழங்கும் பணி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

“இராசமாணிக்கம் மக்கள் அமைப்பு“ ஊடாக களுவாஞ்சிக்குடி, சூரியபுரம், சமுத்திரபுரம், பழந்தோட்டம் போன்ற கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ், போரதீவுபற்று பிரதேச சபையின் தவிசாளர் விமலநாதன் மதிமேனன் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.




















## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஆளுநர் நேற்று கண்காணிப்புப் பயணம்

"வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களும் வெள்ளத்தால் மிக மோசமான அழிவுகளையும், அதிகளவான உட்கட்டுமானச் சேதங்களையும் எதிர்கொண்டுள்ளன. அவற்றை நேரடியாகப் பார்வையிட்டு, மாகாண நிர்வாகத்தின் ஊடான புனரமைப்பு வேலைத்திட்டங்களை விரைவுபடுத்தி, மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிப்படுத்துவதற்காகவே இங்கு வந்துள்ளேன்." – என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விசேட கண்காணிப்புப் பயணத்தை வடக்கு மாகாண ஆளுநர் நேற்று புதன்கிழமை மேற்கொண்டார்.

வவுனியா பயணத்தின்போது ஆளுநருடன் பிரதி அமைச்சரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க, வவுனியா மாவட்ட செயலர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்ட செயலர் நா.கமலதாசன், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரதீஸ் ஆகியோரும் இணைந்து பாதிப்புக்குள்ளான இடங்களைப் பார்வையிட்டனர்.

பூவரசங்குளம் நித்தியநகர் லோகேஸ்வரா வித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களைக் குழுவினர் சந்தித்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள், அதிகாரிகள் வழங்கிய முன்னெச்சரிக்கைக்கு அமைவாக நாம் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்தாலும், எமது வாழ்வாதாரமான கால்நடைகளைக் கொண்டுசெல்ல முடியவில்லை. கடந்த காலங்களை விட இம்முறை திடீரென வெள்ள மட்டம் அதிகரித்தமையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டோம் எனத் தெரிவித்தனர். இறந்துபோன கால்நடைகளைப் புதைப்பதற்கான சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

செட்டிகுளம், கல்கன்குளம் சிறீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் தங்கியுள்ள சண்முகபுரத்தைச் சேர்ந்த 39 குடும்பங்களைச் சந்தித்தபோது, அவர்கள் பாவற்குளம் வான் கதவு திறக்கப்பட்ட விவரம் தமக்கு உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டினர். ஆண்டுதோறும் தாம் பாதிக்கப்படுவதாகவும், இம்முறை தமது வீடுகள், ஆவணங்கள், சொத்துக்கள் மற்றும் கால்நடைகளை இழந்து

தொடர்ச்சி▼











# வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஆளுநர் நேற்று கண்காணிப்புப் பயணம்

தொடர்ச்சி▲

பூச்சிய நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்ட மக்கள், தம்மை வேறிடத்தில் குடியமர்த்துமாறும், அதுவரை நலன்புரி நிலையத்திலேயே தங்கப்போவதாகவும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த மாவட்ட செயலர், அம்மக்களுக்குத் தற்காலிக இருப்பிடத்தை வழங்குவதற்கும், நிரந்தரமாக வேறொரு இடத்தில் குடியமர்த்துவதற்குமான ஒழுங்குகளைத் துரிதமாக மேற்கொள்வதாகவும் ஆளுநர், பிரதி அமைச்சர் முன்னிலையில் உறுதியளித்தார்.

வெள்ளத்தால் புரட்டிப்போடப்பட்ட பூவரசங்குளம் – செட்டிக்குளம் வீதியைப் பார்வையிட்ட ஆளுநர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக இதனை உடனடியாக மக்கள் பாவனைக்கு ஏற்றவாறு திருத்தியமைக்கப் பணித்தார்.

குளக்கட்டு உடைந்ததால் ஆண்டியா புளியங்குளம் – புதுக்குளம் வீதி துண்டாடப்பட்டுள்ளது. பாதுகாப்புத் தரப்பினரின் உதவியுடன் நீர் வெளியேறுவதைத் தடுத்து, வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், நகரப் பகுதிகளைச் சுத்தப்படுத்துதல் மற்றும் சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதனிடையே, மருதமடு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொதிகளையும் ஆளுநர் மற்றும் பிரதி அமைச்சர் வழங்கி வைத்தனர்.

வவுனியாவைத் தொடர்ந்து கிளிநொச்சிக்குப் பயணம் செய்த ஆளுநர், மாவட்ட செயலருடன் இணைந்து பன்னங்கண்டிப் பகுதியைப் பார்வையிட்டார். வட்டக்கச்சிக்குச் செல்லும் பிரதான வீதி துண்டாகப் பிளவடைந்து போக்குவரத்து தடைப்பட்டிருந்த நிலையில், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் தற்காலிகப் புனரமைப்புப் பணிகளை ஆளுநர் ஆய்வு செய்தார்.









# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 70 நாடுகள் உதவி

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தச் சூழ்நிலையைத் தொடர்ந்து சுமார் 70 நாடுகள் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்துள்ளன என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற சில நாடுகள் மீட்பு நடவடிக்கைகளுக்காக மனிதாபிமான உதவிகளை



ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளன என்றும் அவர் கூறினார்.

உதவிகளை வழங்க முன்வந்த நாடுகளில் சீனா, ஜேர்மனி, ஜப்பான், மாலைதீவு, நேபாளம் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் உள்ளடங்குகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

விரைவில் 200 மெட்ரிக் தொன் மனிதாபிமான உதவிப் பொருட்கள் இலங்கைக்கு வந்து சேரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நாடுகள் அவசரகால உதவிகளை மட்டுமின்றி, எதிர்காலத்தில் புனரமைப்புச் செயற்பாட்டுக்குத் தேவையான நிதி மற்றும் இயந்திரங்கள் போன்ற உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# அவிசாவளையில் துப்பாக்கிச்சூடு!

## ஒருவர் படுகாயம்

அவிசாவளை – கொஸ்கம பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு அரசு தடை விதித்திருக்கவில்லை.

எனினும், மாவீரர்களை மகிமைப்படுத்தும் கார்த்திகை மலர் அல்லது செங்காந்தள் மலர் பொதுவாக - குறியீடாக - எல்லா இடங்களிலும் மாவீரர் தின அனுஷ்டிப்பின் போது பயன்படுத்தப்பட்டது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் மாவீரர் தினத்தன்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசனும் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலித்த போது, அங்கு மாவீரர்களின் படங்களுக்குப் பதிலாக - குறியீடாக - கார்த்திகைப் பூவின் படத்தையே பயன்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கார்த்திகைப் பூ குறியீடாகப் பயன்படுத்தப்படுவதற்கு அரசு கூட தடை விதிக்கவில்லை.

ஆனால் கனடாவில் ஒரு மதக் கோவிலில் கார்த்திகைப் பூவுக்கு தடை விதித்த விவகாரம் நீதிமன்றுக்கு சர்ச்சையாகச் செல்லும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

2021 ஆம் ஆண்டில் மாவீரர் தினத்தன்று கார்த்திக் நந்தகுமார் என்பவர் ஒன்ராறியோவில் உள்ள ஐயப்பன் கோவிலுக்கு கார்த்திகை மலரை எடுத்துச் சென்று பூசைக்கு ஒப்படைத்திருக்கிறார். ஆனால் அந்த மலர் விடுதலைப் புலிகளைக் குறியீட்டு ரீதியாகக் குறிப்பிடுகின்றமையால் அந்த மலரைப் பூசைக்கு ஏற்றுக் கொள்ள முடியாது என்று கோவில் நிர்வாகம் தெரிவித்து விட்டதாம்.

இதனை ஆட்சேபித்து, கண்டித்து, கார்த்திக் நந்தகுமார் ஒரு வீடியோ பதிவை முகப்புத்தகம் ஊடாக வெளியிட, அதற்கு எதிராகப் பகிரங்க அறிக்கை ஒன்றை கோயில் நிர்வாகமும் வெளியிட்டு இருக்கின்றது.

கோயில் நிர்வாகத்தின் அறிக்கையில் உள்ள தவறுகள், முன்பின் முரணான கருத்துக்களை தமது அடுத்த வீடியோ பதிவில் கார்த்திக் நந்தகுமார் விவரமாக வெளியிட்டு இருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து ஐயப்பன் கோயில் நிதி விடயங்களில் ஒழுங்கீனங்கள், ஊழல்கள், முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன எனத் தெரிவித்து கார்த்திக் நந்தகுமார் இன்னொரு முகப்புத்தகப் பதிவை வெளியிட, அவருக்கு எதிராக கோயில் நிர்வாகம் அவதூறு வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருக்கின்றது.

அதை விசாரணை செய்த ஒன்ராறியோ நீதிமன்றத்தின் நீதியரசர் எட்வர்ட் மோஹன் என்பவர் ஐயப்பன் கோவிலின் வழக்கைத் தள்ளுபடி செய்தமையுடன் கார்த்திக் நந்தகுமாருக்கு ஏற்பட்ட வழக்குச் செலவான 74,000 டொலரையும் அவருக்குச் செலுத்தும் படி உத்தரவிட்டிருக்கிறார்.

கார்த்திக் நந்தகுமார் கோவிலுக்கு எதிராக தெரிவித்த ஒழுங்கீனக் குற்றச்சாட்டுகள் உண்மைக்கு நெருக்கமானவை என்று தெரிவித்துள்ள நீதியரசர், கார்த்திக் நந்தகுமாரின் வாயை அடக்குவதற்காக - அவரை மௌனிக்க செய்யும் நோக்கில் - இந்த அவதூறு வழக்கை கோவில் நிர்வாகம் தாக்கல் செய்திருக்கிறது, இது தவறான அணுகுமுறை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த வழக்குக்காக கோயில் நிர்வாகம் தன்னளவில் 57 ஆயிரம் டொலர் செலவிட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆக, கார்த்திகைப் பூ தொடர்பான சிக்கலின் விளைவு மொத்தம் ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான கனேடிய டொலர் நீதிமன்றச் செலவை ஏற்படுத்தி முடித்திருக்கிறது.

### யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்குள் வெளியே உள்ள வீடொன்றுக்குக் கனிஷ்ட மாணவர்களை அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 19 பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவர்கள் கடந்த மாதம் 29 ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியல் காலம் முடிவடைந்த பின்னர் நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை முன்னெடுத்த மேலதிக நீதிவான் சந்தேகநபர்கள் 19 பேரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

### சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், 350 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித் துள்ளது.

நாடு முழுவதும் 4 இலட்சத்து 55 ஆயிரத்து 405 குடும்பங்களைச் சேர்ந்த 16 இலட்சத்து 14 ஆயிரத்து 790 பேர் அனர்த்தங்களி னால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, 51 ஆயிரத்து 765 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 974 பேர் நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 1,347 பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.




# திருநெல்வேலியில் இளைஞர் கொலை: கைதான அறுவரும் விளக்கமறியலில்!

**சம்பவ தினமன்று தாக்குதலாளிகளைக் காப்பாற்றும் வகையில் பயணித்த காரும் மீட்பு**

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் இளைஞர் ஒருவர் பட்டப்பகலில் ஓட ஓட வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான 6 பேரையும் எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

6 பேரும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 24 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை நடத்த பொலிஸார் அனுமதி கோரியிருந்தனர்.

பொலிஸாரின் தடுப்புக் காவல் விசாரணையின்போது, கொலைச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் தாக்குதலாளிகளைக் காப்பாற்றும் வகையில் சந்தேக நபர்களைப் பின் தொடர்ந்து பயணித்த கார் ஒன்றும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் ஏழாலை பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் தடுப்புக் காவல் விசாரணை முடிவுற்ற நிலையில் 6 சந்தேகநபர்களும் மீண்டும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டபோதே விளக்கமறியல் உத்தரவை மேலதிக நீதிவான் பிறப்பித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சந்தி அருகில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக பிரதான சூத்திரதாரி உள்ளிட்ட 6 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்து தலைமறைவாகியுள்ள மேலும் இருவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

## டிசம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகுதி மக்களும் – அங்கு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருப்போரும் இது குறித்து கவனமாக இருக்க வேண்டும்.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறைத் தலைவரும் காலநிலை அவதானிப்பாளருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்த காலநிலை அவதானிப்பு அறிக்கையின் பிரகாரம்,

“இன்று முதல் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மத்திய மாகாணங்களில் மிதமான மழை பெய்யும். கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நாளை வெள்ளிக்கிழமை வரை கனமழை பெய்யும். இதேசமயம், வடக்கு, மத்திய மாகாணங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

நாடு முழுவதும் 6, 7ஆம் திகதிகளில் பல இடங்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும். மன்னார், அனுராதபுரம், புத்தளம், கண்டி, நுவரெலியா, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, பதுளை மாவட்டங்களின் பல பகுதிகளில் கன மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது.

8ஆம் திகதி வட மத்திய, மத்திய, கிழக்கு மாகாணங்களிலும் பதுளை மாவட்டங்களிலும் கனமழையும் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் மிதமான மழையும் பெய்யும்.

நாடு முழுவதும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை மிதமானது முதல் கனமழை வரை எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும் 10ஆம் திகதி மிதமான மழை பெய்யும். இது, வடமேற்கு பருவமழை காலம் என்பதால் நாட்டின் பல இடங்களில் அடிக்கடி மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

எனினும், அடுத்த 7 நாட்களுக்குக் கடுமையான காலநிலை ஏற்பட சாத்தியம் இல்லாததால் மழை பெய்தாலும் மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எனினும், புயலால் ஏற்கனவே கனமழை பெய்ததால் ஆறுகளில் நீர் நிலைகள் உயர்ந்து, குளங்கள் நிரம்பி, மண் ஈரமாகி, நுவரெலியா, கண்டி, பதுளை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் சிறிய கனமழை பெய்தாலும் (குறைந்தது 30-40 மி.மீ. என்றாலும்) நிலச்சரிவு ஏற்படும்.

எனவே, இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் இது குறித்துக் கவனமாக இருக்க வேண்டும். மத்திய, ஊவா சப்ரகமுவ மாகாணங்களில் உள்ளவர்கள் குறிப்பாக அடுத்த 6, 7, 8, 9 ஆகிய திகதிகளில் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த மாவட்டங்களில் அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபடுபவர்களும் இதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.” – என்றும் அவர் எச்சரித்துள்ளார்.



## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராக இருப்பதாக கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி, ஆளுநரிடம் குறிப்பிட்டார்.

அதற்கமைய உடனடி உதவிகள் (நிவாரணம்), மீள்கட்டுமான உதவிகள் (வாழ்வைக் கட்டியெழுப்புதல்), நிரந்தரத் தயார்ப்படுத்தல் (எதிர்கால இடர்களை எதிர்கொள்ளல்) ஆகிய உதவிகளை மூன்று கட்டங்களில் இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண மக்களுக்கான தற்போதைய உடனடித் தேவைகளின் பட்டியலை வழங்கினால், உதவிகளை விரைந்து வழங்க முடியும் என்றும் கொன்சியூலர் ஜெனரல் கேட்டுக் கொண்டார்.

அழிவடைந்த உட்கட்டுமானங்களின் சேத விவரங்களையும் வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

உலகளாவிய காலநிலை மாற்றத்தால் அடிக்கடி நிகழக்கூடிய இத்தகைய இடர் பாதிப்புகளைத் தணிப்பதற்கான நிரந்தரக் கட்டமைப்பை இந்தியாவில் உருவாக்கப் பட்டுள்ளது போன்று இங்கும் உருவாக்கு வதற்கான உதவிகளையும் எதிர்காலத்தில் வழங்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

பேரிடர்களின் போது எப்போதும் முதலாவதாக கைகொடுப்பது இந்தியா தான் என்று குறிப்பிட்ட ஆளுநர், அதற் காக மாகாண மக்களின் சார்பில் நன்றி களைத் தெரிவித்துக்கொள்வதாகவும் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங் களும் கூடுதலான அழிவுகளையும், அதிக உட்கட்டுமான அழிவுகளையும் எதிர்கொண்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இறங்குதுறைகள், போக்குவரத்து வீதிகள், பாலங்கள், சிறிய மற்றும் நடுத் தர குளங்கள் எனப் பல்வேறு உட்கட் டுமானங்கள் அழிவடைந்துள்ள விவரங் களை ஆளுநர் முன்வைத்தார்.

வெள்ளம் தற்போது வடியத் தொடங் கியுள்ள நிலையில் மக்கள் முகாம் களிலிருந்து படிப்படியாக வீடுகளுக்குத் திரும்புகின்றனர். பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்காக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் தொடர் பாகவும், மக்களின் வாழ்வாதாரம் சில இடங்களில் அடியோடு அழிக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

பேரிடரின்போது இந்தியாவால் வழங் கப்பட்ட உதவிகள் தொடர்பிலும் எடுக்கப் பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கொன்சியூலர் ஜெனரல் சுட்டிக்காட்டினார்.

தினமும் நிவாரணப் பொருள்களுடன் விமானங்கள் வருகின்றமையையும், மருத்துவக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளும் கொழும்பை வந்தடைந் துள்ளமை தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மரக்கறி இறக்குமதி

மரக்கறி விலைகள் எதிர்பாராதளவுக்கு உயர்ந்துள்ளன என நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

‘டித்வா’ புயலால் தோட்டங்களில் பயிர் வகைகள் அழிவடைந்தமையைத் தொடர்ந்து இவ்வாறு மரக்கறி விலைகள் அதிகரித்துள்ளன.

சமூக வலைத்தளங்களில் உலவும் காணொலிகளின்படி சில கடைகளில் பச்சைமிளகாய் கிலோ 3,000 ரூபாவுக்கும், கரட் மற்றும் லீக்ஸ் கிலோ 2,800 ரூபாய்க்கும், கத்தரிக்காய் 800 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன.

இதேவேளை பல்பொருள் அங்காடிகளிலும் மற்றும் பலசரக்குக் கடைகளிலும் கையிருப்பில் உள்ள பொருள்களைத் தொடர்ந்து மக்கள் வாங்கி வருகையில், அவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருள்களின் விலைகள் இன்னும் உயருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தோட்டங்களில் இருந்து போதியளவு மரக்கறி வகைகளின் விநியோகமில்லாத நிலையில் உள்ளூர் கடைக்காரர்கள் விலைகளை உயர்த்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பொருள்களுக்கு பற்றாக்குறை அல்லது தட்டுப்பாடு ஏற்பட்டால் - விலை உயர்வது - தவிர்க்க முடியாததுதான். அதற்குத் தனித்து உற்பத்தியாாளர்களையோ, வியாபாரிகளையோ, இடைத் தரகர்களையோ மட்டும் குறை சொல்லுவதில் அர்த்தம் இல்லை. மாறாக சந்தையில் போதியளவு பொருள்கள் - தாராளமாக - கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தோட்டங்கள் அழிந்து, நாட்டில் மரக்கறி உற்பத்தி போதியளவு இல்லாத நிலையில் இந்தச் சிக்கலை அரசு எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதுதான் கேள்வி.

விவசாயத் திணைக்களத்தின் தர நிர்ணயத்திற்கு அமைய உறைந்த அல்லது குளிரூட்டப்பட்ட மரக்கறி வகைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் பேரிடர் சூழ்நிலையில் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு விவரம் தெரிவிக்க வேண்டிய தேவையுள்ளது. மாவட்டச் செயலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பண்டங்களின் விவரப் பட்டியலை ஊடகங்கள் மூலம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இது விநியோகஸ்தர்கள் அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களைத் தொடர்புகொண்டு அடையாளம் காணப்பட்ட பொருள்களை விரைந்து தருவித்து வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க உதவும் என்றார் அவர்.

மரக்கறிச் செய்கை பேரிடரால் அழிந்துள்ள நிலையில் இந்த இறக்குமதி தவிர்க்க முடியாதது தான். ஆனால் உள்ளூர் உற்பத்தியை விரைந்து வழமை நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் இத்தகைய மரக்கறி இறக்குமதிக்கு அந்நிய செலாவணியை அதிகம் செலவிடுவதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அதிலும் அரசும் சம்பந்தப்பட்ட துறையினரும் விசேட கவனம் எடுப்பது முக்கியம்.




# நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக 38 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பாதிப்பு

நாட்டில், நிலவிய அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 38 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வெள்ளத்தினால், நாட்டில் 38 எரிபொருள் நிலையங்கள் சேதமடைந்துள்ளன.

அவற்றில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சீர்செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் குமார ஜெயக்கொடி கூறினார்.

எனினும், 24 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இன்னும் செயற்படவில்லை என்றும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அனைத்து எரிபொருள் நிலையங்களும் அடுத்த திங்கள் கிழமைக்குள் முழுமையாக செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி குறிப்பிட்டார்.



# களனி ஆற்றின் நீர்மட்டம் வழமைக்குத் திரும்பியது

களனி ஆற்றின் நாகலகம் வீதியில் நீர்மட்டம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக நீர்ப்பாசனத் துறை தெரிவித்துள்ளது. அதன்படி, அங்குள்ள அளவீட்டில் நீர்மட்டம் நேற்று மாலை 4 மணியளவில் 4.05 அடியாக பதிவாகியுள்ளது.

எனினும், மல்வத்து ஓயா பகுதியில் இன்னமும் லேசான வெள்ள நிலை தொடர்வதாகவும், அந்த நீர்மட்டமும் படிப்படியாக குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.நாட்டில் உள்ள மற்ற அனைத்து நீர்த்தேக்கங்களிலும் வெள்ள நிலைமை குறைந்து தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக நீர்ப்பாசனத் துறை தெரிவித்துள்ளது.

# வட்டியில்லா மாணவர் கடன் திட்டம் விண்ணப்பங்களுக்கான காலம் நீடிப்பு

வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் 10 ஆவது கட்டத்துக்கான விண்ணப்பங்களை கோருவதற்கான காலம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு கடந்த நவம்பர் முதலாம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையை கருத்திற்கொண்டு விண்ணப்பத்துக்கான கால அவகாசத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2022, 2023 அல்லது 2024 ஆம் ஆண்டுகளில் உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மற்றும் 2025 ஆம் ஆண்டில் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வட்டியில்லா மாணவர் கடன் திட்டம் தொடர்பான விண்ணப்பங்களை www.studentloans.mohe.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலதிக மஹாபொல கொடுப்பனவு

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல தவணைக் கொடுப்பனவு விரைவுபடுத்தப்படும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முழு நாட்டையும் பாதித்த பாதகமான வானிலை காரணமாக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சுமூகமாக மீண்டும் தொடங்குவதை எளிதாக்கும் நோக்கில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த மாதம் 28 ஆம் திகதி அன்று செலுத்தப்பட்ட மஹாபொல தவணைக்கு மேலதிகமாக எதிர்வரும் 05ஆம் திகதி அன்று மற்றொரு மஹாபொல தவணையை செலுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# நிவாரண உதவியுடன் 4 ஆவது விமானம் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து வந்தது

கடும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் வகையில், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து மனிதாபிமான உதவிகளுடனான நான்காவது விமானம் நேற்று பிற்பகல் இலங்கையை வந்தடைந்தது.

ஐக்கிய அரபு இராச்சிய விமானப்படைக்குச் சொந்தமான சி -17ஏ விமானம் மூலம் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட இந்த உதவிப் பொருள்களை, இலங்கை இராணுவத்தின் பிரிகேடியர் சஷீந்ர விஜேசிறிவர்தன உத்தியோபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான தேடுதல் பணி,மீட்புப்பணி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கிலான உணவு, நிவாரணப் பொதிகள் மற்றும் மீட்பு வாகனங்கள் ஆகியவை இந்த உதவிப் பொருள்களில் அடங்கும்.

இந்த கடினமான சமயத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உடனடி உதவிகளுக்கு இலங்கை நன்றியுடன் பாராட்டுத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# தொடர்ந்தும் 95 வீதிகளில் போக்குவரத்து தடைகள்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை தகவல்

நாட்டில் பலத்த மழையுடனான வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 95 வீதிகளில் தொடர்ந்தும் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது.

எதிர்வரும் சில நாள்களுக்குள் மேற்படி வீதிகளிலுள்ள தடைகள் நீக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் விமல் கண்டம்பி தெரிவித்துள்ளார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 256 வீதிகள் சேதமடைந்தன.

அதிகார சபையின் பொறியியலாளர் குழு உள்ளிட்ட அதிகாரிகளை ஈடுபடுத்தி வீதிகளில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பிரதான நகரங்கள் அனைத்திலும் வீதி தடைகள் நீக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆபத்தான மண்சரிவுகள் ஏற்பட்ட பகுதிகளில் ஒரு பகுதியை ஒதுக்கி ஒரு வழிப்பாதையை மாத்திரம் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே கடுகண்ணாவை பகுதியில் தடைப்பட்டிருந்த கொழும்பு – கண்டி பிரதான வீதியை மீள திறக்க நடவடிக்கை எடுப்பதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் 20 பாலங்கள் உடைப்பெடுத்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் விமல் கண்டம்பி தெரிவித்துள்ளார்.

இந்த இடங்களின் நிலைமைகளை கருத்திற்கொண்டு தற்காலிக பாலங்களை அமைப்பதற்கும் இருபுறமும் இரும்பு பாலத்தை தாங்கியுள்ள கட்டுமானங்கள் சேதமடைந்திருந்தால் அவற்றை மறுசீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.





# பாலங்களை மீள கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்க நெதர்லாந்து இணக்கம்



அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள பாலங்களை மீள கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்க இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் றுநைடிந னந டீழுநச மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சமீபத்திய அனர்த்தத்திலிருந்து இலங்கை மீண்டுவர ஆரம்பித்திருக்கும் இந்த சவாலான காலப்பகுதியில் இரு நாடுகளின் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அனர்த்த பாதிப்புகளை குறைத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் எதிர்கால ஒத்துழைப்பிற்கான வழிகள் குறித்து பிரதமரும் தூதுவரும் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர் என பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# நைனா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிரை எம்.பியாக பெயரிட்டு வர்த்தமானி வெளியீடு



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நைனா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர் பெயரிடப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட இஸ்மாயில் முத்து முஹம்மது தனது பதவியை அண்மையில் இராஜினாமா செய்திருந்தார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளரினால் நைனா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிரின் பெயர் தேர்தல் ஆணைக் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

நைனா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிரை நாடாளுமன்ற உறுப்பினராக பெயரிட்டு தேர்தல் ஆணைக்குழுவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# தற்பொழுது குறை கூற நேரமில்லை, நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



இரவு பகல் பாராது நாட்டு மக்கள் தொடர்பில் சிந்தித்து முழுமூச்சாக செயற்பட்ட ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தை குறை சொல்வதற்கு இது நேரமில்லை எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இயற்கை அனர்த்தத்திற்கு அரசாங்கத்தை குற்றஞ்சாட்ட முடியாது. தற்போதைய நெருக்கடியில் இருந்து எவ்வாறு மீளலாம் என்ற ஆலோசனைகளை அனைவரும் முன்வைக்க வேண்டும். அரசாங்கத்தை விமர்சிக்கும் நேரம் இதுவல்ல. ஜனாதிபதிக்கு நான் நன்றி கூறுகின்றேன். இரவு பகலாக அவர் முழு மூச்சாக செயற்படுகின்றார்.அவருக்கும் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.


எமது அயல் நாடான இந்தியாவுடன் அரசாங்கம் இணக்கமாகவே செயற்பட வேண்டும். இந்தியாதான் எங்களுக்கு முதலில் உதவி செய்யும் நாடு. எனவே இந்தியாவின் கரத்தை இறுக்கப் பிடிப்பது தான் எமது நாட்டுக்கு நல்லது. இந்தியப் பிரதமர் , தமிழ் நாட்டு முதலமைச்சர் ஆகியோருக்கு இலங்கை மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றேன்.

எமது வன்னி மாவட்டத்தில் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை, நகரசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள் முப்படையினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை அனர்த்தத்தால் மன்னார் மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தை கவனத்திற் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள், கடற் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு வீட்டுக்கு 25000 ரூபா கொடுக்கப்படுவதை அறிந்த மகிழ்ச்சி, இன்னும் கொஞ்சம் அந்தத்தொகையை அதிகரிக்க வேண்டும் எமது பிரதேச சபை, நகரசபைகளின் தவிசாளர்கள் இயற்கை அனர்த்தம் தொடர்பில் முழு மூச்சாக செயற்படுகின்றார்கள் அவர்களுக்கும் நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனர்த்தம் ஒன்று ஏற்படும் போது 100 வீதம் ஒரு வேலையை பூரணமாக செய்ய முடியாது. ஒரு சில குறைகள் இருக்கும். எனவே அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் இதனை புரிந்து கொள்ள வேண்டும். இயற்கை அனர்த்தத்தால் பேரழிவு ஏற்பட்டுள்ளது. ஆகவே குறைகளை மாத்திரம் குறிப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கான ஆலோசனைகளை முன்வையுங்கள்.

அரசாங்கத்துடன் இணைந்து புது நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயார். எல்லோரும் இயற்கையால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவோம். பாகுபாடுகள் வேண்டாம்.எதிர்க்கட்சிகள் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்காதீர்கள். நாம் அன்று சபையிலிருந்து வெளிநடப்பு செய்த்து எமக்கு நேரம் தரவில்லை என்பதற்காக மட்டுமே. அரசாங்கத்துடன் எவ்வித கோபமும் கிடையாது.அரசாங்கத்தின் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்வோம்.“”-என்றார்.



# இன்று கார்த்திகை தீபத் திருநாள்



நடராஜன் ஹரன்

அறிவு என்ற ஞானம் (ஒளி) வரும்போது அறியாமை என்ற இருள் அகல்கிறது.

கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நாள் ஏனைய கார்த்திகை நாள்களை விடவும் விமர்சையாக தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகின்ற ஒரு விழா. மாலை வேளையில் வீடுகளின் வெளிப்புறங்களிலும், வீட்டு முற்றத்திலும் விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள்.

திருக்கார்த்திகை தினத்தன்று ஆலயங்களில் தீபத்திருவிழா நடைபெறும். பக்தர்கள் தீப விளக்குகள் ஏற்றிவைத்து வழிபடுவர். திருக்கார்த்திகையன்று காலையில் குளித்ததும், 7:30 மணிக்குள் குலதெய்வத்தை மனதில் நினைத்து பூஜை செய்ய வேண்டும்.

சிவனுக்கும், முருகனுக்கும் உரிய பாடல்களைப் பாட வேண்டும். அன்று மாலை வரை மனதிற்குள் அண்ணாமலைக்கு அரோகரா, நமசிவாய, சிவாயநம, சரவணபவ ஆகிய மந்திரங்களை உச்சரிக்க வேண்டும்.

மாலை ஆறு மணிக்கு விளக்கேற்ற வேண்டும். ஆறு விளக்குகளுக்கு குறையக்கூடாது. விநாயகர், முருகன், சிவன் படங்களை வைத்து பழம், வெற்றிலை பாக்கு, பொரி, பிடி கொழுக்கட்டை ஆகியவற்றை நைவேத்யம் செய்ய வேண்டும். தீபாராதனை காட்டி பிரசாதம் சாப்பிட்டு விரதம் முடிக்க வேண்டும்.

தொடர்ந்து விரதமிருக்க விரும்புபவர்கள் திருக்கார்த்திகையன்று தொடங்கி, அடுத்த திருக்கார்த்திகை வரை அனுஷ்டித்தால் முருகன் அருளால் அனைத்து நலமும் பெறலாம்.

கோவிலில் ஏற்றப்படும் தீபத்திற்கு அவ்வளவு மகத்துவம் உண்டு. நாம் முற்பிறவியில் அறியாமல் செய்த பாவங்கள் கூட கோவிலில் தீபம் ஏற்றுவதாலும், தீபத்தை தரிசிப்பதாலும் விலகி விடும். அதனால், திருக்கார்த்திகை அன்று கோவில்களில் தீபஸ்தம்பம், அணையாதீபம், லட்சதீபம், கோடி தீபம் என்று பல பெயர்களில் ஏற்றி வைப்பர். கோவில் முன் சொக்கப்பனை கொளுத்துவர். சிவனையும், முருகனையும் அக்னி வடிவமாக வழிபடுவர்.

கார்த்திகை விழாவை குமராலாய தீபம், சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என மூன்றாக ஆலயங்களிலும் வீடுகளியும் கொண்டாடுவர்.

**குமராலய தீபம்:-** முருகன் ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கூடிவரும் நாள்.

**விஷ்ணுவாலய தீபம்:-** விஷ்ணு ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் ரோகினி நட்சத்திரம் கூடிவரும் நாள்.

**சர்வாலய தீபம்:-**ஏனைய இந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்து முழுமதி திதி.

தீப ஜோதியை வணங்கி வழிபடுவது இந்துக்கள் காலம் காலமாக கடைபிடித்து வரும் வழிமுறையாகும்.

தொடர்ச்சி ▼




# இன்று கார்த்திகை தீபத் திருநாள்

தொடர்ச்சி ▲

அறிவு என்ற ஞானம் (ஒளி) வரும்போது அறியாமை என்ற இருள் அகல்கிறது என்பதே இதன் ஐதீகம்.

அகல், எண்ணெய், திரி, சுடர் என்ற நான்கும் ஒன்று சேரும்போது விளக்கு ஆகின்றது. இவையே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படுவதாகும். இந்த மகா ஒளியையே தீப சக்தியாக வணங்குகிறோம்.

கார்த்திகை நாளன்று ஒவ்வொருவர் வீட்டு வாசலிலும் விளக்கு ஏற்றி கடவுளை வணங்குவது உண்டு. இதில் ஒவ்வொரு முக விளக்குக்கும் ஒவ்வொரு காரணங்கள் கூறப்படுகிறது.

ஒரு முகம் ஏற்றினால் – நினைத்த செயல்கள் நடக்கும்.
இரு முகம் ஏற்றினால் – குடும்பம் சிறக்கும்.
மூன்று முகம் ஏற்றினால் – புத்திர தோஷம் நீங்கும்.
நான்கு முகம் ஏற்றினால் – செல்வம் பெருகும்.
ஐந்து முகம் ஏற்றினால் – சகல நன்மைகளும் உண்டாகும்.

எனவே குடும்பத்தில் சகல நன்மைகளும் பெருகவும், கடவுளின் அருள் கிட்டவும் வீட்டில் தீபம் ஏற்றி வழிபடுங்கள்.




# மன்னார் நீர் வினியோகம் பாதுகாப்பானது போலிச் செய்திகள், வதந்திகளை நம்பாதீர்

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள நிலையால், மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் மாசுபட்டுள்ளது என்ற பொய்யான செய்தி சமூக வலைத்தளங்களில் பரவி வருவதாக மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இந்த தகவல் முழுவதும் வதந்தி என்பதை தெளிவாக அறிவிக்கிறோம்.

மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படும் குடிதண்ணீர் பாதுகாப்பான குழாய் கிணறுகளில் இருந்து பெறப்படுகிறது. இந்த நீர்மூலங்கள் மேற்பரப்பு வெள்ளத்தால் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

எங்களின் ஆய்வகப் பிரிவு தொடர்ச்சியாக நீர் தரத்தை பரிசோதித்து மன்னார் மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் பாதுகாப்பானது மற்றும் குடிப்பதற்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்தி வருகிறது.

ஆகையால், பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம். வதந்திகளை நம்ப வேண்டாம். தேவையான எந்த அறிவிப்பும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். –என மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

# ஹட்டன் - தலவாக்கலை - வட்டகொடைப் பகுதிகளில் நிலைமைகளை அவதானித்தார் பிரதி அமைச்சர் பிரதீப்



**(க.கிஷாந்தன்)**

தலவாக்கலை – வட்டகொடை உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட கனமழை மற்றும் மண்சரிவு காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று அப்பகுதிகளில் கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆய்வு செய்தார்.

ஹட்டன் வுஏவுஊ தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சென்ற பிரதி அமைச்சர், அங்குள்ள மாணவர்களை சந்தித்து அவர்களது குடும்பங்கள் அனர்த்தத்தால் எதிர்நோக்கும் நிலைமைகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார். மாணவர்களின் குடும்பத்தினருக்கான அவசர நிவாரணங்கள் தாமதமின்றி வழங்கப்படுவதற்கான வழிமுறைகள் உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மாணவர்கள் எதிர்நோக்கும் கல்வி மற்றும் தொழில்நுட்ப சவால்கள் குறித்து பிரதி அமைச்சர் உரிய அதிகாரிகளுடன் அங்கு இருந்தபோதே தொலைபேசியில் கலந்துரையாடி உடனடி தீர்வுகளை அறிவுறுத்தினார். அதனுடன், கற்கை நெறி விருத்தி, தரநிலைகள் உயர்த்தல் மற்றும் மாணவர் உள்ளீர்ப்பு அதிகரிப்பு தொடர்பான விவகாரங்களும் அதிகாரிகளுடன் ஆராயப்பட்டன.

பின்னர் தலவாக்கலை – வட்டகொடை யொக்ஸ்போர்ட் தோட்டப்பகுதிக்குச் செல்லும் வழியில் சமீபத்தில் ஏற்பட்ட மண்சரிவு பாதிப்புகளும் பிரிதி அமைச்சர் பிரதீப் அவர்களால் நேரில் பார்வையிடப்பட்டன. மண்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களில் மண் அகற்றும் பணிகள், வீதிகள் மறுசீரமைப்பு மற்றும் மக்களுக்கு பாதுகாப்பான பயண வசதிகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அதிகாரிகளுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வட்டகொடை யொக்ஸ்போர்ட் தோட்டம் மற்றும் மடகும்புர தெற்கு தோட்டப் பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தத்தால் தற்காலிக பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களை பிரதி அமைச்சர் சந்தித்தார். பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகள் உணவு, நீர், உடைகள், குழந்தைகளுக்கான பராமரிப்பு பொருள்கள் மற்றும் சுகாதார வசதிகள் உடனடியாக வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் வேகமாக முன்னெடுக்கப்படுவதாக உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுடன் உரையாடிய பிரதி அமைச்சர் –

“அனர்த்தத்தில் சிக்கிய ஒவ்வொருவரின் பாதுகாப்பும் நலனும் எங்களின் முதன்மை. அரசாங்கம் அனைத்து நிறுவனங்களையும் இணைத்து ஒருமித்த முறையில் நிவாரண நடவடிக்கைகளை செயற்படுத்துகிறது. யாரும் புறக்கணிக்கப்பட மாட்டார்கள்” என ர்தெரிவித்தார்.

தலவாக்கலை – வட்டகொடை பகுதி மக்கள் எதிர்நோக்கும் உடனடி சிக்கல்கள் மற்றும் எதிர்காலத்தில் இத்தகைய அனர்த்தங்களைத் தவிர்க்க வேண்டிய நீண்டகால நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதி அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த கள விஜயத்தின் போது, பிரதி அமைச்சருடன், கொட்டகலை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் யாகுலமேரி, கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர் சுதர்சன், அகரபத்தனை பிரதேச சபை உறுப்பினர்களான கவிஷான், மற்றும் பிரபு, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர் றொஹான், பிரதி அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர்களான வசந்தமூர்த்தி மற்றும் சிவநேசன் ஆகியோர் உடனிருந்தனர்.












# ஐம்பது எருமை மாடுகள் மீட்கப்பட்டன

கிண்ணியா உப்பாறு காட்டுப்பகுதியில் இருந்து நீரோட்டத்திற்குள் அகப்பட்ட சுமார் 50 எருமை மாடுகளை நேற்று மீட்கப்பட்டன.

இவற்றைக் காப்பாற்றும் நோக்கில் இந்த எருமை மாடுகளை கிண்ணியாவில் இருந்து படகு மூலமாக மூதூர் கரையோரப் பகுதிக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

சீரற்ற கால நிலை காரணமாக நீரால் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் இந்த எருமை மாடுகள் உயிருக்குப் போராடிய நிலையில் தத்தளித்து கொண்டிருந்தன.



# மன்னார் மாவட்டத்தில் மறு அறிவித்தல் வரை ஆடு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனை தடை

## நோய் வாய்ப்பட்ட, இறந்த கால்நடைகள் இறைச்சியாக்கப்படுகின்றமை கண்டுபிடிப்பு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் நேற்றுப் புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை ஆடு மற்றும் மாடு இறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான கால்நடைகள் உயிரிழுந்துள்ளன.

இந்த நிலையில் உயிரிழந்த ஆடு, மாடுகள் இறைச்சியாக்கி மன்னார் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மிருக வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாகவும் நேற்று புதன்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆடு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வெள்ளத்தினால் நோய் வாய்ப்பட்ட மற்றும் உயிரிழந்த ஆடு மற்றும் மாடு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உத்தரவை மீறி ஆடு மற்றும் மாடு இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இவ் விடயம் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் செயல்படு மாறும் மறு அறிவித்தல் கிடைக்கும் வரை ஆடு மற்றும் மாட்டு இறைச்சிகளை கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# திருமலை - மட்டு. வீதியில் ரால்குழியை சீரமைக்கும் வேலைகள் முழு மும்முரமாக

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் ரால்குழி பகுதியில், பாரியளவில் சேமடைந்துள்ள 600 முதல் 800 மீற்றர் நீளமான வீதி, பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவின் நேரடிக் கண்காணிப்புடன் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது.

மழை வெள்ளத்தினால் பாதிப்பிற் குள்ளாகி, அழிவடைந்துள்ள இந்த வீதி தற்போது வாகனங்கள் பயணம் செய்யக் கூடியளவிற்கு சீரமைக்கப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் இந்தப் பணிகளில் ஈடு பட்டுள்ளனர். இவர்களுடன் முப்படை யினரும் இந்த வேலைகளில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இவ்வீதி சீரமைக்கபட்டால் மட்டுமே மீளவும் திருகோணமலையிலிருந்து புறப்படும் வாகனங்கள் கிண்ணியா. மூதூர், வெருகல், வாகரை ஊடாக மட்டக்களப்பு, கல்முனை, அம்பா றையை சென்றடைய முடியும்.

எனினும் நேற்றய் மதியம் வரை திருகோணமலையில் இருந்து புறப்பட்ட வாகனங்கள் கந்தளாய், ஹபறணை, மின்னேரியா, பொலன்னறுவை, வெலிக் கந்தை. மன்னம்பிட்டி ஊடாக மட்டுமே மட்டக்களப்பை சென்றடைந்துள் ளன. இப்பாதை அதிக நேர விரயம் மற்றும் அதிக பணச் செலவு கொண்ட தாகும்.





# பேரிடர் நிவாரணம் வழங்கும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தை மாற்றுங்கள்

## நாடாளுமன்றில் அரசுக்கு யோசனை கூறுகின்றார் சஜித்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, தற்போதுள்ள வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளில் திருத்தங்களைக் கொண்டு வந்து, புதிய வரவு – செலவுத் திட்டத்தை அவசரமாக முன்வைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திற்கு யோசனை முன்வைத்தார்.

வரும் வெள்ளிக்கிழமை வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முன், முன்வைக்கப்பட்டுள்ள தற்போதைய வரவு – செலவுத் திட்டம் பேரிடருக்குப் பிந்தைய நாட்டின் நிலைமைக்கு ஏற்றதா என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த இக்கட்டான கட்டத்தில், பாதிக்கப்பட்ட 15 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் குறித்து பார்த்து, மேலும் சில நா/களை எடுத்து, குறுகிய காலத்தில் புதிய வரவு – செலவுத் திட்டத்தை முன்வைப்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலும், பேரிடரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்பும் முகமான வரவு – செலவுத் திட்டத்தை தயாரிப்பதே தற்சமயம் செய்ய வேண்டிய பணியாக உள்ளது. மேலும் தாமதிக்காமல், இந்தப் பெரும் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அவசரமாக வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

அதற்காக மேலும் சில நாள்களை எடுத்து புதிய வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட பேரழிவு குறித்து தனது கருத்துக்களைத் தெரிவித்து, நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டுமாறும், அரசாங்கத்தால் இவ்வாறு இந்த மாநாட்டைக் கூட்ட முடியாவிட்டால், அரசாங்கத்தின் சார்பாக எதிர்க்கட்சி இதனைக் கூட்டி, நாட்டிற்குத் தேவையான நிதிகளைத் திரட்டித் தருகிறோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறே, சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய இணக்கப்பாட்டை எட்டிக் கொள்வதற்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். மக்களை மேலும் பாதிக்கும், மக்களை ஒடுக்கும் விதமான நிபந்தனைகளுடன் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் தொடர இயலாது என்பதால், நாம் அவசரமாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச வேண்டியதை அரசாங்கத்தால் பேச முடியாவிட்டால், எதிர்க்கட்சியாக நாம் பேச வேண்டியதைப் பேசுகிறோம். புதிய இணக்கப்பாட்டை எட்டி மக்களுக்கு பக்க பலத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.




மக்களை வாழ வைக்கவும், மக்களைப் பாதுகாக்கவும், நாட்டை முன்னேற்றவும், பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், இழந்த விவசாய காணி வளங்களில் திருத்த வேலைகளைச் செய்வதற்குமான புதிய திட்டமொன்றை வகுத்து முன்னெடுக்க வேண்டும். அரசியல்மயப்படாத வேலைத்திட்டமொன்றை வகுத்துச் செயற்படுவதற்கு எதிர்க்கட்சியினரான நாமும் எமது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் பெற்றுத் தருவோம். – என்றார் அவர்.

அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கைகளுக்கு எம்மால் இடமளிக்க முடியாது. அவசரகாலச் சட்டம் மக்களை ஆதரிப்பதற்காகவே அன்றி, ஊடகங்களை நசுக்குவதற்காக அல்ல. சட்டம் – ஒழுங்கைப் பாதுகாக்கும் துறைக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இது போன்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். இன்று இந்த சட்டத்தைப் உபயோகித்து சமூக ஊடக ஆர்வலர்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றனர். இந்த அடக்குமுறையை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், கொவிட், நாட்டில் ஏற்பட்ட வங்குரோத்து நிலை மற்றும் டித்வா சூறாவளி புயல் என கடந்த 7 ஆண்டுகளுக்குள் நமது நாடு பெரும் துயரங்களைச் சந்தித்துள்ளது. டித்வா சூறாவளிப் புயல் பேரனர்த்தத்தின் விளைவாக 437,507 குடும்பங்கள், 1,558,919 பேர் பாதிக்கப்பட்டு 465 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. அதேபோல் 366 பேர் காணாமல் போயுள்ளனர். 783 வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்து போக, 31,417 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துபோயுள்ளன. மேலும், 1,433 இடைத்தங்கல் முகாம்களில் 61,875 குடும்பங்களைச் சேர்ந்த 232,752 பேர் தற்போது இருந்து வருகின்றனர்.

இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமாக – தங்கள் உயிர்களை இழந்த அனைவருக்குமாக – தமது சொத்துக்களை, தமது வாழ்வாதாரங்களை இழந்து, இடம்பெயர்ந்து, சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ள அனைவருக்குமாக – தேசிய துக்க தினத்தை பிரகடனப்படுத்துமாறு இன்று யோசனை முன்வைக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு நாடாக நாம் பல சவால்களை எதிர்கொண்டுள்ள இந்நேரத்தில், எதிர்க்கட்சியாக நமது பொறுப்பை நிறைவேற்றி வருகிறோம். இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி, அரசியலை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டு மக்களுக்கு சிறந்த சேவைகளைச் செய்து வருகிறோம். இன்றளவில், ஜப்பான், கொரியா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, இத்தாலி மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளின் தூதுர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதிகளைச் சந்தித்து, எங்கள் நாட்டிற்கு சாத்தியமான அனைத்து நிவாரண உதவிகளையும் முடிந்தவரை பூரணமாகப் பெற்றுத் தருமாறு நாங்கள் கேட்டுக் கொண்டோம்.

அவ்வாறே, இவ்வாறு கிடைக்கும் உதவிகளை ஆதரவுகளை வெளிப்படையான, வினைத்திறனான மற்றும் நியாயமானதொரு திட்டத்தின் மூலம், வெளித் தெரியும் விதமான அணுகுமுறையுடன் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்

தொடர்ச்சி▼

# பேரிடர் நிவாரணம் வழங்கும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தை மாற்றுங்கள்

தொடர்ச்சி▲

உதவிகள் போய் சேரும் வண்ணம் பெற்றுக் கொடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

இந்நேரத்தில், மக்கள் இழந்த, சேதமடைந்த சொத்துக்கள் முயற்சியாண்மைகளை மீட்டெடுக்க, புனர்நிர்மாணம் செய்ய, சீரமைக்க, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் மக்களுக்கும் அதிகபட்ச நிவாரணங்களை வழங்கி வைக்க வேண்டும்.

உயிரிழந்த, வாழ்வாதாரங்களை இழந்த, இடம்பெயர்ந்த மக்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு ஒன்றிணைந்ததொரு கூட்டுத் திட்டம் அவசியமாகும். விவசாயத் துறை, மீன்பிடித் துறை மற்றும் சுகாதாரத் துறைகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை தீர்க்கப்பட்டு சுற்றுலாத் துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். தற்போது பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், காலாவதியான சுற்றறிக்கைகளை மாற்றி, மக்களுக்கு உதவ அரச அதிகாரிகளுக்கும் தேவையான சட்டக்கட்டமைப்புச் சட்டகத்தை தயாரிக்குமாறு நாங்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது 220 இலட்சம் நுகர்வோரைச் சுரண்டி வரும் கறுப்புச் சந்தை மாபியா உருவெடுத்து வருவதால், விலைக் கட்டுப்பாடுகளைஅறிமுகப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம். பிரச்சினைகளில் இருந்து ஒளிந்து ஓடாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரப்பணிப்போடு செயற்படுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

இந்தப் பேரழிவின் ஊடாக அரசியலை முன்னெடுக்கக் கூடாது. உயிர்களையும் சொத்துக்களையும் இழந்த மக்களை முன்னிறுத்தி, அரசியல் ரீதியாக பிரபலமாகும் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடாது.

ஏற்பட்ட சேதத்தை ஏன் குறைக்க முடியாமல் போனது என்பதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டும். பேரிடரை நிர்வகிப்பதற்குப் பதிலாக பேரிடர் விளம்பரப்படுத்தப்படுவதற்கு ஏதுவானது யாது என்பது தொடர்பில் நாம் பார்க்க வேண்டியுள்ளது. நாடு மீண்டும் ஒருமுறை விலைமதிப்பற்ற உயிர்களை இழக்கும் நிலைக்கு வரக் கூடாது. கீழ்த்தரமான அரசியலிலிருந்து விலகி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தார்மீக அரசியல் கலாச்சாரத்திற்குள் இருந்து கொண்டு பக்கபலத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வளவு ஆபத்தான சூழ்நிலை ஏற்படும் என வளிமண்டலளவியல் திணைக்களம் எச்சரித்தபோது, இது குறித்து பரிசீலித்துப் பார்க்க தவறியது ஏன் என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். டிரம்பின் தீர்வை வரிகளை நீக்கி, தொழிலதிபர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும். தவறுகளையும் குறைபாடுகளையும் சரிசெய்து கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப எமது அதிகபட்ச ஆற்றலை வழங்குவதுதான் இந்நேரத்தில் நமது பொறுப்பாக அமைந்து காணப்பட வேண்டும். இந்த விடயத்தில் எதிர்க்கட்சி தனது கடமைகளை சரியாக நிறைவேற்றும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வளிமண்டலவியல் திணைக்களம் முன்னறிவிப்புச் செய்யும் போது, அந்த செய்தி பொதுமக்களுக்குத் தெரிவிக்காததற்கான காரணங்கள் தொடர்பில் ஆராய வேண்டும். இடர் முகாமைத்துவச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் முறையாகச் சரிசெய்யப்படாததற்கான காரணங்கள் தொடர்பில் ஆராய வேண்டும். அனர்த்த நிலைமையின் தீவிரம் தெரிந்திருந்தும் ஏன் அவசரகால நிலை அறிவிக்கப்படவில்லை என்பது குறித்தும் ஆராய வேண்டிய அவசியம் காணப்படுகின்றன. டாப்ளர் ரேடார் கட்டமைப்பைத் நிறுவத் தவறியது குறித்தும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# வழுக்கையாறு பற்றிய கண்காட்சி சுன்னாகத்தில் சனிக்கிழமையன்று

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுசரணையில் சுன்னாகத்தில் வழுக்கையாற்றைப் பற்றிய சிறப்புக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை 6ஆம் திகதி சுன்னாகம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள எம்.எம். மண்டபத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நீர் ஆய்வுத்திட்ட செயற்றிட்டத்தின் ஓர் அம்சமாக வலிகாமம் பகுதியின் ஊடாகச் செல்லும் வழுக்கையாற்றின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கொன்று, வழுக்கையாறு கடந்து செல்லும் பிரதேசத்தின் நான்கு முக்கிய பிரதேச சபைகளும் அவற்றின் மக்கள் பிரதிநிதிகளுக்குமென சிறப்பான கருத்தமர்வு உரையாடலுடன் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கின் இறுதியில் அங்கு சிறப்புக் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் வழுக்கையாற்றின் பல்வேறு பரிமாணங்களை விளக்கும் மாதிரி ஒன்று மாலை 2 மணி முதல் 5 மணி வரையான நேரத்தில் பொது மக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.



யாழ் மாவட்ட நீர் வளத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகத் திகழும் வழுக்கையாற்றின் விவரங்கள் குறித்துத் தெளிவு பெறுவதற்கு ஆர்வமுள்ள நீரார்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# திருவண்ணாமலையில் மகா தீபம் கோலாகலம்

## லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

கார்த்திகை தீபத்தை முன்னிட்டு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் தீபத் திருவிழா நிறைவாக 2,668 அடி உயரமுள்ள மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது. லட்சக்கணக்கான பக்தர்கள் மகாதீபத்தை தரிசனம் செய்தனர்.

நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் மிகவும் பிரசித்தி பெற்ற விழாவான கார்த்திகை தீபத் திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. 'தான்' என்ற அகந்தையை அழிக்க சிவபெருமான் திருவண்ணாமலையில் அடிமுடி காண முடியாத அக்னிப் பிழம்



பாக காட்சியளித்தார். அந்த நாளே திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருவிழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது .

அதன்படி, இந்தாண்டு கடந்த நவம்பர் .24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் கார்த்திகை தீபத் திருவிழாவின் 10 நாள் உற்சவம் ஆரம்பமானது. விழாவின் 10 ஆம் நாள் உற்சவம் நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

அண்ணாமலையார் சந்நிதியில் உள்ள அர்த்த மண்டபத்தில் அதிகாலை 4 மணிக்கு ஏகன் அநேகன் தத்துவத்தை உலகுக்கு எடுத்துரைத்து பஞ்ச பூதங்களும் நானே என்பதை இறைவன் உணர்த்தும் பரணி தீபத்தை சிவாச்சாரியார்கள் ஏற்றினர். பின்னர், பரணி தீபமானது அம்மன் சந்நிதி, விநாயகர் சந்நிதி உள்ளிட்ட அனைத்து சந்நிதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு தீபம் ஏற்றப்பட்டது. இதில், ஏராளமான பக்தர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் திரண்டு தரிசனம் செய்தனர்.

# திருப்பரங்குன்றம் மலை உச்சி தீபத்தூணில் தீபம் ஏற்றும் நிகழ்வில் பெரும் பரபரப்பு

## 144 தடை உத்தரவு



திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவின் ஒன்பதாம் நாளான நேற்று மலையில் உச்சிப்பிள்ளையார் கோயில் முன்புள்ள தீபத்தூணில் மாலை 6.05 மணிக்கு தீபம் ஏற்றப்பட்டது.

ஆனால், மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றவில்லை. இந்து முன்னணி, பா.ஜ.கவினர் திரண்டு பொலிஸாரின் தடைகளை உடைத்து கோயில் நோக்கி புறப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தூணில் தீபம் ஏற்றும் உயர் நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்படாத நிலையில், சி.ஐ.எஸ்.எப். பொலிஸ் பாதுகாப்புடன் மனுதாரர்களும் தீபத்தூணில் தீபம் ஏற்ற உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் முதல் படைவீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா நவம்பர் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி டிசம்பர் 4 ஆம் திகதி வரை 10 நாள்கள் நடைபெறுகிறது.

முக்கிய விழாவான தீபத் திருவிழாவை முன்னிட்டு நேற்று காலையில் சிறிய வைரத் தேரோட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், வழக்கம்போல் உச்சிப்பிள்ளையார் கோயில் முன்பு தீபம் ஏற்றவதுபோல், மலை உச்சியிலுள்ள தீபத்தூணியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டது.

அதனையொட்டி நீதிமன்ற உத்தரவுப்படி மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்குரிய நெய், காடாத்துணி போன்றவற்றை பிற்பகல் 3.30 மணியளவில் கோயில் பணியாளர்கள் கொண்டு சென்றனர். இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம், பா.ஜ.க. மாநில பொதுச்செயலாளர் ராம.சீனிவாசன் தலைமையில் அக்கட்சியினர் திரண்டு மாலை 5 மணியளவில் 16 கால் மண்டபம் முன்பு அமர்ந்து கந்த சஷ்டி கவசம் பாடினர். இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பலத்த பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மாலையில் 6 மணியளவில் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பாலதீபம் ஏற்றப்பட்டது. அதன் பின்பு உச்சிப்பிள்ளையார்கோயில் முன்புள்ள தீபத்தூணில் மகா தீபம் ஏற்றப்பட்டது. ஆனால், நீதிமன்ற உத்தரவுப்படி மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றவில்லை. இதனால், இந்து முன்னணியினர், பா.ஜ.கவினர் திரண்டு பொலிஸாரின் தடைகளை உடைத்து 16 கால் மண்டபம் வரை முன்னேறினர். அங்கு 16 கால் மண்டபம் முன்பு பொலிஸாருக்கும் இந்து முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்பினருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின் தடைகளை மீறி வீரவேல், வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா என கோஷங்கள் எழுப்பியவாறு கோயிலை நோக்கி சென்றனர். இதனால் சுமார் அரைமணிநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்கு உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு உத்தரவிட்டது. இந்த உத்தரவை நிறைவேற்றாததால் வழக்கு தொடர்ந்த மனுதாரர்கள், மத்திய தொழிலக பாதுகாப்புடன் திருப்பரங்குன்றம் மலை உச்சிக்கு சென்று தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிபதி ஜிஆர்.சுவாமிநாதன் புதன்கிழமை மாலை உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து மனுதாரரான ராமரவிக்குமார், சக மனுத்தாரர்கள், இந்து அமைப்பினர் 60-க்கும் மேற்பட்ட மத்திய தொழிலக பாதுகாப்பு வீரர்களுடன் புதன்கிழமை இரவு திருப்பரங்குன்றம் சென்றனர். முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள பழனியாண்டவர் கோயிலில் பாதை வழியாக மலை உச்சிக்கு செல்ல முயன்றனர். அப்போது, அவர்களை அங்கு பொலிஸார் தடுப்பு வேலிகளை போட்டு மறைத்து அனுமதி மறுத்தனர்.

திருப்பரங்குன்றம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறக்கப்பட்டுள்ளதாலும், தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டு இருப்பதாலும் இதில் முடிவு வரும் வரையிலும் யாரையும் மலைக்கு போகக் கூடாது பொலிஸார் அறிவுறுத்தனர். இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. தொடர்ந்து அப்பகுதியில் இந்து அமைப்பினர் ஏராளமானோர் திரண்டனர். அவர்களும் தடுப்புகளை மீறி மலைக்கு மேல் செல்ல முயன்றனர்.

அவர்களை பொலிஸார் தடுத்ததால் ஆத்திரத்தில் தடுப்புகளை தள்ளி விட்டும், மதில் சுவர்களில் ஏறியும் மலை பாதைநோக்கி ஓட முயன்றனர். தடுப்பு வேலிகளும் இந்து அமைப்பினரால் தூக்கியதில் பொலிஸ்காரர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. முருகன் கோயிலுக்கு புகுந்து சிலர் போராட்டம் நடத்தினர். தொடர்ந்து பதற்றமான சூழலால் தென்மண்டல ஐ.ஜி. பிரேம் ஆனந்த் சின்கா, மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பதினாறு கால் மண்டபம் , கோயில், மலை பகுதி பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பின்னர் 6.30 மணியளவில் மாநகர பொலிஸ் ஆணையர் ஜெ.லோகநாதன் தலைமையில் கோயில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, மலை உச்சியிலுள்ள தீபத் தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# பேராசை பட விரும்பவில்லை எனக்கு நோபல் பரிசு வேண்டாம்

## டொனால்ட் ட்ரம்ப் கூறுகின்றார்

இந்தியா- பாகிஸ்தான் போர் உட்பட 8 போர்களை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக எனக்கு 8 நோபல் பரிசுகள் கிடைத்திருக்க வேண்டும் எனவும் ஆனால் நான் பேராசை கொள்ளவில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அமைச்சரவை கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரை யாற்றும் போது, போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க, வெனிசுலாவிற்குள் அமெரிக்கா விரைவில் தாக்குதலை தொடங்கும் என அவர் தெரிவித் தார்.

அத்தோடு, போதைப்பொருட்களை நம் நாட்டிற்கு விற்பனை செய்யும் எவரும் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

"ஒரு போரை முடிவுக்கு கொண்டு வரும்போது ஒவ்வொரு முறையும்



எனக்கு நோபல் பரிசு கிடைக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள். நான் இந்தியா- பாகிஸ்தான் உட்பட 8 போர்களை நிறுத்தி உள்ளேன். எனக்கு நோபல் பரிசு கிடைக்காது. இப்போது அவர்கள், ரஷ்யா மற்றும் உக்ரைனுட னான போரை எப்போதாவது முடிவுக் குக் கொண்டுவந்தால், எனக்கு நோபல் பரிசு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். நான் முடிவுக்கு கொண்டு வந்த அனைத்துப் போர்களையும் நினைத்துப் பாருங்கள். ஒவ்வொரு போருக்கும் எனக்கு நோபல் பரிசு கிடைக்க வேண் டும். ஆனால் எனக்கு அது வேண்டாம். நான் பேராசைப்பட விரும்பவில்லை." என்று தெரிவித்துள்ளார்.

# டில்லியில் ஏற்பட்ட காற்று மாசுபாடு காரணமாக லட்சக்கணக்கானோர் சுவாச நோயால் பாதிப்பு

இந்தியாவின் தலைநகர் டில்லியில் ஏற்பட்ட காற்று மாசுபாடு காரணமாக, 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கடுமை யான சுவாச நோய்களால் பாதிக்கப்பட் டுள்ளனர்.

2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த நோயாளர்கள், 6 அரச மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டனர் என இந் திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.



# மாயமான மலேசிய விமானம்; 10 ஆண்டுகளுக்கு பின் தேடல்




காணாமல் போய் ஒரு தசாப்தத்திற்கு பின்னர், மலேசிய விமானத்தை தேடும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

கடந்த 2014 ஆம் ஆண்டு கோலாலம்பூரிலிருந்து பெய்ஜிங்கிற்குச் செல்லும் வழியில் போயிங் 777 என்ற மலேசிய விமானம் 227 பயணிகள் மற்றும் 12 பணியா ளர்களுடன் காணாமல் போனது.

அதன் பின்னர் குறித்த விமானத்தை தேடி பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அனைத்தும் பலனளிக்கவில்லை.

இந்தநிலையில், 2025, டிசம்பர் 30 ஆம் திகதியன்று, அந்த விமானத்தை தேடும் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் என மலேசிய போக்குவரத்து அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

இந்தநிலையிலேயே, விமானத்தை கண்டுபிடிப்பதற்கான அதிக நிகழ்தகவு இருப்பதாக மதிப்பிடப்பட்ட இலக்கு பகுதியில் இந்த தேடல் மேற்கொள்ளப்படவுள்ளதாக மலேசிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், அந்த இடம் எது என்பது குறித்த தகவலை மலேசிய அரசாங்கம் வெளியிடவில்லை.

முன்னதாக, மலேசிய புலனாய்வாளர்கள் ஆரம்பத்தில் குறித்த விமானம் வேண்டுமென்றே திசை திருப்பப்பட்ட தற்கான சாத்தியக் கூறுகளையும் நிராகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.12.2025




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். இன்று சஞ்சலமான மனநிலையில் இருப்பீர்கள். இன்று தகுந்த முடிவுகளை எடுக்க இயலாது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதை கடினமாகக் கருதுவீர்கள். திட்டமிட்டு பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுவது சிறந்தது.

உங்கள் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். குடும்பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

தாயின் உடல்நிலை குறித்த கவலை இருக்கும். அவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்கள் முடிவுகளில் கவனம் தேவை. நீங்கள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. வேலை இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நேர்மறையான அணுகுமுறை நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படும். சேமிப்பதற்காக பணம் ஈட்டுவதை இன்று கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தால் இன்று வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் நேர்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும் உங்கள் செயல் திறன் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை விளையும். நீங்கள் இருவரும் பரஸ்பரம் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை லாபகரமான முதலீடு செய்ய பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று சிறந்த மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே உங்கள் பணிகளை முடித்து விடுவீர்கள்.

உங்கள் அன்பான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் உங்கள் உறவில் மகிழ்ச்சி ஏற்படும்.

உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்கள் சார்பாக செயல்படும் நல்ல நேரம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமும் வருத்தமும் காணப்படும். நீங்கள் உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவீர்கள். இதனை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். அதனால் உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படும். என்றாலும் மனம் திறந்த பேச்சின் மூலம் நன்மை விளையும்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும். எனவே செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

நரம்பு பாதிப்பு காரணமாக கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. தேவையற்ற கவலைகள் காரணமாக இன்று உங்கள் திறன் குறையும். என்றாலும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்படலாம். எனவே உங்கள் துணையுடன் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகளின் சுமை காணப்படும். பணத்தை திட்டமிட்டு முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

உங்கள் தாய்க்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களிடம் வருத்தமான மனநிலை காணப்படும். உங்கள் முயற்சிகள் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்காது. இதனை சுமையாகக் கருதுவீர்கள். முறையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம்.

நல்ல வாய்ப்பு வழங்கும் வேலை மாற்றத்தை நீங்கள் வரவேற்கலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க சம்பவங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். பணத்தை முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

கண் சம்பந்தமான பிரச்சினை காணப்படும்.




உங்களின் திறமையான தகவல் பரிமாற்றம் மூலம் வெற்றிகரமான பலன் காண்பீர்கள். ஆன்மீக சொற்பொழிவு மற்றும் இறை மந்திரங்கள் ஜெபித்தல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். இதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணியில் சிறந்த நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே காணப்படும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவீர்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்யலாம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.12.2025




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. சிறப்பாக திட்டமிட்டால் பதட்டமின்றி செயல்படலாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணியிடத்தில் சகபணியாளர்களுடனான உறவுமுறையில் சில குழப்பங்கள் காணப்படும். அதனை சமாளித்து பணியாற்ற இன்று பொறுமை அவசியம்.

இன்று சிறிய விஷயங்களைப் பெரிதாகக் கொள்வீர்கள். உங்கள் குடும்ப விஷயத்தில் உங்கள் துணையுடன் சில சிக்கல்களை சந்திக்க நேரும். மனம் திறந்து பேசி வேறுபாட்டை களைவதன் மூலம் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

நிதிநிலை சிறப்பாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் பணத்தை கடனாக வாங்குவீர்கள்.




இன்று உற்சாகமாக இருப்பீர்கள். இன்று நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.உங்களின் சீரிய அணுகுமுறை மூலம் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் திருப்தியான மனநிலை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த நட்பான அணுகுமுறை கொள்ள நேரலாம்.

இன்று நிதிநிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மூலம் உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களின் நேர்மறையான மன நிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்களை இன்று எடுக்கலாம். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவை ஆறுதல் அளிக்கும். நம்பிக்கையான அணுகுமுறை சிறந்த பலனளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் பணிகளை சரியான குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. திட்டமிட்டு கவனமுடன் பணியாற்றினால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இந்த வேறுபாட்டை நீக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருக்க அவருடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பணபுழக்கம் குறைவாக இருக்கும். வீண் விரயங்களை தவிர்க்க பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.





இன்றைய நாள் சாதகமான விளைவுகளையும் மகிழ்ச்சியான தருணங்களையும் அளிக்கும். நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பணியில் உங்கள் செயல்திறன் திருப்திகரமாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இது இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட வழி வகுக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்கள் தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




# பல்கலைகளில் பீடாதிபதிகளின் தெரிவை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்த முடிவு

இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மறு அறிவித்தல் வரை பீடாதிபதிகள் தெரிவுக்கான தேர்தல்களை நடத்துவதில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் மறு அறிவித்தல் வரை பீடாதிபதி தெரிவுக்கான தேர்தல்களை நடத்த வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி, மறு அறிவித்தல் வரை பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்கள் தெரிவுக்காக ஆரம்பிக்கப்பட்ட பணிகளை உடனடியாகக் கைவிடுவதுடன், தற்போது பதவியிலுள்ள பீடாதிபதிகள் மற்றும் துறைத்தலைவர்களின் பதவிக் காலம் நிறைவுக்கு வருமாயின் அவர்களையே பதில்கடமை ஆற்றும் வகையில் இந் நிலைமாறுகாலப் பகுதிக்கு நியமிக்குமாறும் பல்கலைக் கழகப் பேரவைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 49 ஆம் பிரிவில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள திருத்தச்சட்ட வரைவின் அடிப்படையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் நிர்வாகப் பணிகளில் ஈடுபடுவதை மேலும் விரிவாக்கும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.